செ.வெ.எண்:-40/2020 நாள்:30.03.2020

திண்டுக்கல் மாவட்டம்

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுத்திடும் பொருட்டு நிவாரணத்தொகை ரூ.1000/- வீதம் 6,27,004 குடும்ப அட்டைதாரர்களுக்கு வரும் 02.04.2020 முதல் வழங்கப்படவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தமிழ்நாடு அரசு கொரோனா வைரஸ் நோய்த் தொற்றை தடுக்க தொடர்ந்து தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.3.2020 அன்று சட்டப்பேரவையில் கொரோனா வைரஸ் வெளியிட்ட நிவாரண அறிவிப்பில், அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.1000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) நிவாரணமாக வழங்கப்படும் என்றும் ஏப்ரல் மாதத்திற்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் அவர்களின் குடும்ப அட்டைக்கு தகுதியான அளவு அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் மற்றும் சர்க்கரை விலையின்றி வழங்கப்படும் எனவும் குடும்ப அட்டைதாரர்கள் மார்ச் மாதத்திற்கான ரேசன் பொருட்களை வாங்க தவறியிருப்பின், ஏப்ரல் மாதத்திற்கான பொருட்களுடன் சேர்த்து வாங்கிக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அரிசிபெறும் 6,27,004 குடும்ப அட்டைதாரர்கள் நிவாரணத்தொகையினை பெற்று பயனடைய உள்ளனர். குடும்ப அட்டைதாரர்கள் ரொக்க தொகை ரூ.1000/-ஐ வரும் 2.4.2020 முதல் மின்னணு குடும்ப அட்டையின் (Smart card) மூலம் சம்பந்தப்பட்ட நியாய விலைக்கடைகளில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது. கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, முன்கூட்டியே டோக்கன் வழங்கப்பட்டு, நியாய விலைக்கடைகளில், தெருவாரியாக / அ.பதிவேடு எண் வாரியாக தினமும் 200 முதல் 300 நபர்களுக்கு நிவாரணத்தொகை வழங்கப்படவுள்ளது. இந்த விபரம் ஒவ்வொரு நியாய விலைக்கடைகளிலும் காட்சிபடுத்தப்பட உள்ளது. சம்பந்தப்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் குறிப்பிட்ட நாளில் நியாய விலைக்கடைகளுக்குச் சென்று விலையில்லா பொருட்களுடன் ரொக்கத் தொகையினையும் பெற்றுக் கொள்ளலாம்.

கொரானா வைரஸ் உதவித் தொகையினைப் பெற வரும் குடும்ப அட்டைதாரர்கள் ஒரு மீட்டர் இடைவெளியில் தனிமைப்படுத்தி (Social Distancing) வாங்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடும்ப அட்டைதாரர்கள் இந்த அறிவுரையை தவறாமல் பின்பற்ற வேண்டும்.

உதவித்தொகை வழங்கும்போது, அரசு குடும்ப நலம் மற்றும் சுகாதாரத் துறை கொரோனா வைரஸ் நோய் தொற்றை தடுக்க வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாது கடைபிடிக்க வேண்டும். மேலும் ரூ.1000/- நிவாரணத்தொகை மற்றும் விலையில்லாப் பொருட்களை பெற விருப்பம் இல்லாதவர்கள் ( www.tnpds.gov.in/tnepds app.) என்ற வலைதளத்தில் மின்னணு முறையில் அல்லது செயலியில் பதிவு செய்யலாம்.

ஸ்மார்ட் குடும்ப அட்டை தொலைந்து போன குடும்ப அட்டைதாரர்கள் அவர்களின் குடும்ப அட்டையில் உள்ள ஏதேனும் ஒருவரின் ஆதார் அட்டையினை வைத்தோ, பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணிற்கு வரும் ஒரு முறை கடவுச் சொல் (OTP) அடிப்படையில் ரொக்கத் தொகையினை பெற்றுக் கொள்ளலாம். ரொக்கத் தொகை வழங்குவது தொடர்பாக பொதுமக்கள் புகார் எதுவும் தெரிவிக்க விரும்பினால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறைக்கு 94450 00321 என்ற கைபேசி வாயிலாகவோ அல்லது 0451-2460097 என்ற தொலைபேசி வாயிலாகவோ தெரிவிக்கலாம்.

மேலும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நிவாரணத்தொகை ரூ.1000/- வழங்க அரசு உத்திரவிட்டுள்ளதால், பொதுமக்கள் கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு தங்கள் குடும்பத்திற்கான நிவாரணத்தொகையினை விநியோகிக்க ஒதுக்கீடு செய்யப்பட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் நியாய விலைக்கடைகளுக்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---